

சென்னை தெற்கு மாவட்ட இந்தியா கூட்டணி சார்பில் எஸ்.ஐ.ஆர்.ஐ கண்டித்து சைதாப்பேட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் கட்சி தமிழ்மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலிபூங்குன்றன், விவசாயிகள் – தொழிலாளர் கட்சித் தலைவர் பொன்குமார், மனிதநேய மக்கள் கட்சி அபுபக்கர், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி., காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., அசன் மௌலானா எம்.எம்.ஏ கவிஞர் காசிமுத்துமாணிக்கம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.

### இந்தியாவிலேயே S.I.R. ஐ ஆதரித்து வழக்குத் தாக்கல் செய்த ஒரே கட்சி அ.தி.மு.க.தான்!

# வழக்குப் போட்டு ராஜ விசுவாசத்தைக் காட்டுவது வெட்கக்கேடு!

## எடப்பாடிக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

**சென்னை, நவ.12-**

**"வாக்குரிமையைப் பறிப்பதற்குத் துணை போகும் சதியில் எடப்பாடி பழனிசாமியும் ஒரு பார்ட்னர்! இந்தியாவிலேயே SIR ஐ ஆதரித்து வழக்கு தாக்கல் செய்த ஒரே கட்சி அ.தி.மு.க. தான் எடப்பாடி வழக்குப் போட்டு ராஜ விசுவாசத்தைக் காட்டுவது வெட்கக்கேடு!" என்று இயற்கை வளங்கள் துறை அமைச்சர் ரகுபதி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-



சரியான வாக்காளர் பட்டியலுடன் முறைகேடுகள் இல்லாத தேர்தலை நடத்தவும், அதற்காக வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்பதிலும் தி.மு.க.வுக்கு எப்போதுமே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தலுக்குச் சில மாதங்களே உள்ள நிலையில், போதுமான கால அவகாசம் தராமல், அவசர அவசரமாக SIR பணியைத் தேர்தல் ஆணையம் மேற்கொள்வதில் உள்நோக்கம் இருக்கிறது என்பதாலேயே திமுக எதிர்க்கிறது.

**பா.ஜ.க.வின் கிளைக் கழகம் அ.தி.மு.க.!**

பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்காளர்களை நீக்கம் செய்யும் சதியைத் தடுக்கவும், தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்கவும், SIRக்கு எதிராக அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டங்களைக் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து நடத்தியிருக்கிறது திமுக. அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தி, ஜனநாயகத்தின் அடிப்படையான வாக்குரிமையைப் பறிக்கும் SIR ஐ எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தி.மு.க. வழக்கு தொடர்ந்துள்ளது.

ஆரியம், திராவிடம் பற்றிக் கேட்டால், "அதற்கெல்லாம் புராணம் படிக்க வேண்டும். ஆய்வு செய்ய வேண்டும்" எனச் சொன்ன பழனிசாமிக்கு, ஜனநாயகம் பற்றி மட்டும் தெரிந்துவிடுமா? ஜனநாயகத்தின் மீது கொஞ்சமும் அக்கறை இல்லாத அதிமுக, தமிழர்களின் வாக்குரிமையைப் பற்றியா கவலைப்படும்? தமிழர்களின் வாக்குரிமை காப்பாற்றப்பட வேண்டும் எனத் தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடங்கி, உச்சநீதிமன்றத்தின் கதவைத் தட்டுவது வரை தி.மு.க. போராடிக் கொண்டிருக்கிறது. ஆனால், அ.தி.மு.க.வோ SIRஐ ஆதரித்து வழக்கு தொடருந்திருக்கிறது.

'உங்க ஓட்டு உங்களுக்கு இல்லை' எனச் சொல்லி வாக்குரிமையைப் பறிப்பதற்குத் துணை போகும் சதியில் எடப்பாடி பழனிசாமியும் ஒரு பார்ட்னர். பா.ஜ.க. கூட SIRஐ ஆதரித்து வழக்கு போடாத நிலையில், பா.ஜ.க.வின் கிளைக் கழகமாகவே செயல்படும் அ.தி.மு.க.வும் அதன் 'சிறந்த அடிமை'யான பழனிசாமியும் நீதிமன்றம் வரை சென்றிருக்கிறார்கள். "இந்தியாவிலேயே கார் வைத்திருக்கும் கரகாட்டக் கோஷ்டி நாம்தான்" என்ற காமெடி போல, இந்தியாவிலேயே SIR ஐ ஆதரித்து வழக்கு தாக்கல் செய்த ஒரே கட்சி அ.தி.மு.க. தான் என்ற வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

**துரோகம் செய்வதில் முனைவர் பட்டம்பெற்ற பழனிசாமி!**

தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற உண்மை தெரிந்துவிட்டதால், SIR மூலம் வெற்றி பெற்றுவிடலாம் என பாஜகவை நம்பி, சித்து விளையாட்டில் இறங்கியிருக்கிறார் துரோகம் செய்வதில் முனைவர் பட்டம் பெற்ற பழனிசாமி. கூவத்தூரில் 'ஊர்ந்தெடுக்கப்பட்டு' முதல்வர் ஆனது போல, SIR மூலம் கொள்ளைப்புற முதலமைச்சரா கத் துடிக்கிறார். பாஜகவின் வாக்கு திருட்டு வியூகம் அதிமுகவுக்குப் பயன்படும் என்ற நப்பாசையில் SIRஐ ஆதரிக்கிறார் பழனிசாமி.

முஸ்லிம்களைப் பாதிக்கும் வகையில் மோடி அரசு கொண்டு வந்த CAA சட்டத்தை ஆதரித்துவிட்டு, "முஸ்லிம்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை" எனப் பச்சைப் பொய் சொன்ன பழனிசாமிதான், அந்த CAA சட்டத்தை SIR வழியாக அமல்படுத்தத் துடிக்கும் பாஜகவுக்குத் துணை போகிறார். SIR நடவடிக்கையால் தமிழர்களின் வாக்குரிமைக்கு மட்டுமல்ல; அவர்களின் குடியுரிமைக்கே ஆபத்து ஏற்படலாம் என்கிற பேராபத்து சூழ்ந்திருக்கிறது.

வேளாண் சட்டம், உதய் மின் திட்டம், மதுரை அரிட்டாப்பட்டி டங்ஸ்டன் சுரங்கப் பிரச்சினைக்கு காரணமான MINES AND MINERALS திருத்தச் சட்டம், குடியுரிமை திருத்த சட்டம் உள்ளிட்ட பாஜக ஒன்றிய அரசு கொண்டுவந்த சட்டங்களையும் திட்டங்களைக் கண்களை மூடி ஆதரித்து, சிறந்த அடிமையாக விளங்கி வரும் எடப்பாடி பழனிசாமி, தற்போது SIRலும் 'ஆலம்பனா நான் உங்கள் அடிமை' என முன்னுக்கு வந்து நிற்கிறார்.

பீகாரில் SIR பணி நடைபெற்ற போது, பாஜகவின் கூட்டணியில் இடம் பெற்ற ஐக்கிய ஜனதா தளம் வழக்கு தாக்கல் செய்யவில்லை. பாஜக கூட்டணியில் இடம்பெற்ற ஆந்திர மாநிலத்தின் தெலுங்கு தேசம் கட்சி SIR நடவடிக்கையை ஆதரித்து வழக்கு போடவில்லை. மாறாக, இஸ்லாமியர்களின் குடியுரிமையைச் சோதிக்கும் வகையில் SIR நடவடிக்கையைத் தேர்தல் ஆணையம் பயன்படுத்தக் கூடாது என்று கவலை தெரிவித்துள்ளது. ஆனால், 'அடிமை சேவை செய்வதே என் தவ வாழ்க்கை' என வாழ்ந்து கொண்டிருக்கும் பழனிசாமி, SIRஐ ஆதரித்தோடு வழக்கு போட்டு ராஜ விஸ்வாசத்தைக் காட்டுவது வெட்கக்கேடு.

மக்களைப் பற்றியும் மக்கள் நலனைப் பற்றியும் துளியும் கவலையில்லாமல் டெல்லி எஜமானர்களின் மனம் குளிர மட்டுமே அடிமை சேவகம் செய்து வரும் பழனிசாமி தனது கட்சியை அடமானம் வைத்தது மட்டுமின்றி, தமிழர்களின் வாக்குரி மையைப் பறித்து தமிழ்நாட்டை டெல்லியின் அடிமையாக்க முயல்கிறார். இந்த அற்ப செயலுக்குத் தமிழ்நாட்டு மக்கள் தக்க பதிலடி அளிப்பார்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

## உதகை நகரத்தில் ஏழை எளியோருக்கு நல உதவிகள்!

### நகரக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

*நீலகிரி, நவ.12-*

உதகை நகர திமுக ஒருங்கிணைந்த கழக கூட்டம் உதகை மாவட்ட தி.மு.க. அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் நகரக் கழக செயலாளர் எஸ் ஜார்ஜ் தலைமையில் நடைபெற்றது. நகரக் கழக கிழக்கு பொறுப்பாளர் ஜே. எஸ். ரமேஷ் வரவேற்புரையாற்றினர். இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் தென்றல் செல்வராஜ் கலந்துகொண்டு எஸ்.ஐ.ஆர். குறித்தும், 2026 தேர்தல் பணிகள் குறித்தும் சிறப்பான கருத்துக்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாவட்டத் துணைச் செயலாளர் ஜே. ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் ஏ.நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர். இளங்கோவன், கே தம்பி இஸ்மாயில், நகரத் துணைச் செயலாளர் கே. ஏ. இச்சு பாய், நகர பொருளாளர் அணில் குமார், நகர மன்ற தலைவர் வாணீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் எஸ். ஐ. ஆரை கொண்டு வந்துள்ளதைக் கண்டித்து, கழக தலைவர் தளபதியார் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க, நேற்று உதகை ஏ.டி.சி. பகுதியில் தோழமைக் கட்சிகளின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் உதகை நகர கழகம் சார்பில் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி உறுப்பினர்கள், கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் கழகம் அறிவிக்கும் வேட்பாளர் அதிகம் அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றி பெற செய்வதற்கு கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் தங்களை தேர்தல் பணிகளை முழு முயற்சியுடனும், அனைவரும் ஒன்றிணைந்து அயராது பாடுபட வேண்டும். மேலும் வாக்கு சாவடி பாக முகவர்கள், வாக்குச்சாவடி அலுவலர்களுடன் இணைந்து எஸ். ஐ.ஆர். வாக்காளர் திருத்த பணியினை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் 27 11 2025 அன்று பிறந்தநாள் காணும் துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளிய, ஆதரவற்ற முதியோர் களுக்கு மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிப்பது என முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்ட நிறைவில் நகரப் பொருளாளர் அனில் குமார் நன்றி கூறினர்.

---

## பூவிருந்தவல்லியில் புதிய பள்ளிவாசல் கட்டிடம்!

திருவள்ளூர் நவ.12–

பூவிருந்தவல்லி அடுத்த மலையம்பாக்கம் கிராமத்தில் பூவிருந்தவல்லி பெரிய பள்ளிவாசலுக்கு சொந்தமான இடத்தில் புதிய பள்ளிவாசல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில் பெரிய பள்ளிவாசல் தலைவர் முஹம்மது ஹனீப் கௌஸ் தலைமை தாங்கினார். செயலாளர் ராஜா உசேன், பொருளாளர் சேக் பரீத், நிர்வாகிகள் மகபூப் பாஷா, அப்துல் ரசாக், அப்துல்சலாம், சதக்கத்துல்லா, யூனுஸ் இப்ராஹிம், ஆதம்ஷா, கலிம் அகமது உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். துணைத் தலைவர் மாஹீன் அபுபக்கர் வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு புதிய பள்ளிவாசல் கட்டடத்தை திறந்து வைத்தனர்.

---

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின்

## மாநில - மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் !

### செயலாளர் டாக்டர்.அ.சுபேர்கான் அறிவிப்பு!

*சென்னை, நவ.12-*

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை நடைபெறுகிறது என்று அதன் செயலாளர் டாக்டர். அ. சுபேர்கான் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக இளைஞரணிச் செயலாளர் - தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படி கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் ஆலோசனைக்கூட்டம் நாளை (13.11.2025 வியாழன்) மாலை 4 மணியளவில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக இளைஞரணிச் செயலாளர் - தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மற்றும் கழக ஆக்கப்பணிகள் தொடர்பாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

**SIR எனும் சூழ்ச்சி ஆணி**

